நானிலம் போற்றும் நான்காண்டுச் சாதனைகள்! திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர், இந்திய தேசத்தின் 'மாடல்' முதல்வர்!

சாதனை, சாதனை, சாதனை...

தமிழகத்தில் கழகத் தலைவர் - மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.கழக ஆட்சி அமைந்து நான்கு ஆண்டுகள் முழுமைபெற்று. இன்று ஐந்தாம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது; திராவிட மாடல் நாயகர்- முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு!

இந்தியாவே தமிழ்நாட்டை தலைநிமிர்ந்து பார்க்கிறது!

அந்த அளவிற்கு திராவிட மாடல் அரசு - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கம்பீரமாக உயர்ந்து நிற்கிறார்! இந்த சாதனைகள் எல்லாம் யாரோ ஒரு தனிப்பட்ட நபரால் செய்து விட முடியாது; திராவிட இயக்கத்தின் வழித் தோன்றல் ஒருவரால் தான் இத்தகைய சாதனைகளை நிகழ்த்திட முடியும்!

திராவிட இயக்கத்தின் தளகர்த்தர்கள் டாக்டர் நடேசனார், டி.எம்.நாயர், சர்-பிட்டி தியாகராயர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில்;

இதோ நமது கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நான்காண்டு சாதனை பட்டியல்;

இந்த சாதனைப் பட்டியல் என்பது கல்வெட்டுகளில் பதியக் கூடிய சரித்திர திட்டங்கள்!

அத்தனையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உழைப்பின் முத்துக்கள்!

அந்த சாதனை முத்துச் சரங்களை முடிந்த அளவில் ஒரு துளி மட்டுமே இங்கே தொகுத்தளித்திருக்கிறோம். இதோ அந்த சாதனை முத்துக்கள்:-

7.5.2021

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்தது 2021, மே7 ஆம் தேதி வெள்ளிக்கிழமை!

'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்...' என்று கூறி முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது முதன் முதலில் கையெழுத்திட்டது ஐந்து முத்துக்கள்!

1) கொரோனா நிவாரண நிதியாக ரூபாய் 4000 உதவித் தொகை வழங்கப்படும்

2) ஆவின் பால்விலை விட்டருக்கு ரூ.3 குறைப்பு

3) அரசுப் போக்குவரத்து பேருந்துகளில் மகளிர் இலவச பயணம்

4) 100 நாட்களில் தீர்வு காண உங்கள் தொகுதியில் முதலமைச்சர்

5) கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு தனியாா் மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவா்களுக்கு அதற்கான கட்டணத்தை தமிழக அரசே காப்பீட்டுத் திட்டத்தில் ஏற்கும்.

தமிழகத்தில் 'நீட்' தேர்வு தாக்கம் குறித்து அறிக்கை சமா்ப்பிக்க ஓய்வு பெற்ற நீதியரசர் ராஜன் தலைமையில் குழு அமைப்பு, மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவிற்குத் துணைத் தலைவர் மற்றும் 9 உறுப் பினர்கள் நியமனம். வன்னியர்கள், சீா்மபினர் மற்றும் இதர மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சிறப்பு ஒதுக்கீடு வழங்கி அரசாணை வெளியீடு. நலிந்த கலைஞர்களுக்கான மாதாந்தர நிதி உதவி ரூ.3000 ஆக உயா்வு. ஸ்டெர்லைட் ஆலை போராட்டத்திற்கு எதிரான வழக்குகள் அனைத்தும் ரத்து.

பொதுமக்கள் மின் துறை சாா்ந்த குறைகளைத் தெரிவித்திட, 'மின்னகம்' என்ற புதிய மின் நுகர்வோர் சேவை மையம்.

தமிழகத்தில் தொழில் வளர்ச்சியை பெருக்கவும், வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும், முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ் நாடு விழாவில் 49 திட்டங்களின் மூலம், ரூ.28,508 கோடி முதலீட்டில், 83,482 பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் புதிய தொழில் நிறுவனங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தாயின.

சட்டமன்ற நூற்றாண்டு விழாவில் தமிழக சட்டப் பேரவையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்களால் திறந்து வைத்து கலைஞர் அவர்களுக்கு பெருமை சேர்த்தார் தமிழக முதல்வர். கடந்த ஆட்சியில் கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராக ஊடகங்கள் மீது தொடரப்பட்ட அனைத்து வழக்குகளும் ரத்து.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொலைநோக்குத் திட்டமான 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற உன்னத திட்டத்தினை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

கடந்த 10 ஆண்டுகாலமாக அ.தி.மு.க. ஆ்சின் நிதி நிலை அனைவரும் அறிந்ததே. அந்த நிதி நிலை அறிக்கை குறித்த வெள்ளை அறிக்கையை முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின் படி நிதிஅமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் வெளியிட்டார்.

மாமன்னர் ராஜேந்திர சோழன் – தமிழர்களுக்கே பெருமைச் சேர்க்கும் வகையில் தமிழர்களின் கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலைக் கட்டினார். அவரது பிறந்த நாள் அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

முதல்வராக மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு. கழகம் ஆ்சி அமைந்து, முதல் பட்ஜெட்டினை, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

தமிழ்நாடு வரலாற்றில் தமிழகத்தின் உயிர் நாடியான வேளாண் துறைக்கென்று தனியாக பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. சுதந்திரம் பெற்று 75 ஆண்டைக் குறிக்கும் வகையில் சென்னை கடற்கரைச் சாலையில் நினைவுத் தூண். தமிழினத்தின் வளர்ச்சிக்கு மாபெரும் பங்காற்றிய வர்களைப் பெருமைப்படுத்தும் வகையில் தகைசால் தமிழர் விருது.

தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்துச் சிறப்பிக்கும் வகையில் இலக்கிய மாமணி விருது. ஞானபீடம், சாகித்ய அகாடமி மற்றும் மாநில உலகளாவிய அமைப்புகளின் முக்கிய விருதுகள் பெற்றவர்களுக்கு அரசு வீடு. அரசு பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை. இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்களில் அன்னைத் தமிழில் அர்ச்சனை. 100 திருக்கோயில்களில் திருப்பணி மற்றும் குடமுழுக்கு. 100 திருக்கோயில்களில் நந்தவனங்கள் மற்றும் தெப்பக்குளங்கள் சீரமைப்பு. இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்களின் நில உரிமை ஆவணங்கள் இணையை தளத்தில் வெளியீடு.

முதுதமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு சென்னை மெரீனாவில் 2.21 ஏக்கர் பரப்பளவில் ரூ.39 கோடி மதிப்பீட்டில் நினைவிடம். அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இளநிலைத் தொழிற்கல்விப் படிப்புகளில் 7.5 சதவிகிதம் இடஒதுக்கீடு. தமிழகத்தில் மறுவாழ்வு மையங்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட ரூ.317.40 கோடி நிதி ஒதுக்கீடு.

ஒன்றிய அரசின் மூன்று வேளாண் சட்டங்களை இரத்து செய்யக் கோரும் தீர்மானம் சட்டப்பேரவையில் நிறைவேற்றம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு சென்னை அண்ணா சாலையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

தமிழ்நாடு குடிமைப் பதுதி மாற்று வாரியம் இனி தமிழ் நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என அழைக்கப்படும்.

எல்லோர்க்கும் எல்லாம் எனும் பொதுவுடைமை புலரும் பூங்கா தமிழ்நாடு!

அயோத்திதாசர் அவர்களுக்கு வடசென்னையில் மணிமண்டபம் அமைக்கப்படும்.

வ.உ.சி. நினைவு நாள் நவம்பர் 18, தியாகத் திருநாளாக அறிவிப்பு.

தந்தை பெரியார் பிறந்த செப்டம்பர் 17 ஆம் நாளை ஆண்டுதோறும் சமூக நீதி நாளாகக் கொண்டாடுவோம்.

பெரும் புலவர் பாரதி மறைந்த நூற்றாண்டின் நினைவாக அவரது பெருமையைப் போற்றும் வகையில் செப்டம்பர் 11 மகாகவி நாள்" கடைப்பிடிக்கப்படும்.

தமிழக காவலர்களுக்கு வாரம் ஒரு நாள் விடுமுறை அளிக்கப்படும்.

பெண் காவலர்கள் வி.ஐ.பி.க்கள் வருகையின் போது சாலையில் பந்தோபஸ்த் நிற்பதில் இருந்து விதிவிலக்கு.

விழுப்புரம் மாவட்டத்தில் 21 சமூக நீதிப் போராளிகளுக்கு மணி மண்டபம் அறிவிப்பு. தன்னாட்சி அதிகாரத்துடன் தமிழ்நாடு ஆதி திராவிடர் – பழங்குடியினர் நல ஆணையம்.

திருநெல்வேலியில் தமிழனின் பெருமையை விளக்கும் வகையில் ரூ.15 கோடியில் பொருநை அருங்காட்சியகம்.

நீட் தேர்வு தமிழகத்திற்கு விலக்கு கோரி பேரவையில் சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டம் 2019 ஐ இரத்து செய்யக் கோரும் தீர்மானம்.

நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் 50 ஆண்டு கால சட்டமன்றப் பணியினைப் பாராட்டி தீர்மானம்.

ஒரு கால பூதைத் திட்டத்தின் கீழ், 12,959 திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், பூசாரிகளுக்கு மாத ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் தொடக்கம்.

ஏழை எளியோர் வாழும் இடத்திலேயே சிறப்பு மருத்துவச் சேவை அளிக்கும் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் தொடக்கம்.

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ் தூய்மைப் பணியாளர்களுக்கு ரூ.36.52 கோடியில் பேட்டரியில் இயங்கும் 1684 மூன்று சக்கர வாகனங்கள் வழங்கல்.

நடப்பாண்டில் 30 மாவட்டங்களில் 76 இலட்சம் பனைவிதைகளையும், ஒரு லட்சம் பனக்கன்றுகளையும் மாநிலத்தில் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு ஒரு லட்சம் பனை விதைகளை முதல்வரிடம் வழங்கினார்.

ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம் தொடக்கம்.

கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி தமிழ் விருது (2010 முதல் 2019 வரை) 10 ஆண்டுகளுக்கு அறிவிப்பு.

அக்டோபர் 5 அருட்பிரகாச வள்ளலார் பிறந்த தினம். தனிப்பெருங் கருணை நாள் என அறிவிப்பு

சென்னை கொளத்தூரில் கலையரங்கம், பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் அமைப்பு

சேலம் மாவட்டத்தில் பலகோடி மதிப்பீட்டில் வளர்ச்சி திட்டப் பணிகள் துவக்கம்.

வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காக்க புலம் பெயர் தமிழர் நல வாரியம் அறிவிப்பு

திருச்செந்தூர், சமயபுரம், திருத்தணி திருக்கோவில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் தொடக்கம்.

அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு தொழிற் கல்விகளில் 7.5. சதவிகித இடஒதுக்கீடு படிப்பு செலவு முழுமையும் அரசே ஏற்கும் என்ற அறிவிப்பு

திருக்கோவில்களில் தலை முடி மழிக்கும் பணியாளர்களுக்கு மாத ஊக்கத் தொகையாக ரூ.5000 வழங்கும் திட்டம் தொடக்கம்.

6 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.1597.18 கோடி சம்பாப் பயிர்களுக்கான இழப்பீட்டுத் தொகை வழங்கல்.

சென்னை கொளத்தூரில் அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து உதவிப் பேராசிரியர்கள் நியமனம்.

துணிநூல் துறை என்ற புதிய துறை உருவாக்கம்.

இல்லம் தேடி கல்வித் திட்டம் துவக்கம்.

ரூ142.16 கோடியில் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்களுக்குப் புதிய குடியிருப்பிற்கான திட்டப் பணிகள் துவக்கம்.

கோவிட் பெருந்தொற்றுப் பணியில் ஈடுபட்ட மருத்துவப் பணியாளர்களுக்கு ரூ.196.91 கோடியில் ஊக்கத் தொகை வழங்கல்.

மாமல்லபுரத்தில் நரிக்குறவர் மற்றும் இருளர் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள், குடும்ப அட்டைகள், வாக்காளர் அடையாள அட்டைகள், சாதிச் சான்றிதழ்கள், நலவாரிய அட்டைகள், பயிர்க்கான ஆணைகள், கடனுதவிகள் வழங்கல்.

கோயம்புத்தூரில் முதலீட்டாளர்கள் மாநாடு முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ் நாடு. இம்மாநாட்டின் மூலம் ரூ52.549 கோடி முதலீட்டில் 92.420 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள்.

ஆட்சி அதிகாரம் அனைத்தும் கடைக்கோடி மனிதரையும் அரவணைத்துக் காப்பதற்கே!

சிமெண்ட் விலையைக் குறைக்க அரசு சார்பில் குறைந்த விலையில் உயர் தர வலிமை சிமெண்ட் அறிமுகம்.

முதலமைச்சரின் ஊக்கம் தரும் காய்கறித் தோட்டம் திட்டம் தொடக்கம்.

ரூ.20 கோடியில் பள்ளிக்ரணையில் சதுப்புநிலச் சூழலியல் பூங்கா.

சேலம் மாவட்டத்தின் வளர்ச்சிக்காக ரூ.1242 கோடி மதிப்பீட்டில் முக்கிய திட்டங்கள்.

திருத்தணியில் மகளிர் சுயஉதவிக்குழுவினருக்கு ரூ.2 ஆயிரத்து 750 கோடியில் கடன் வழங்கல்.

ரூ.3 கோடியில் 20 இண்டகோ தேநீர் ஊர்திகளில் விற்பனை துவக்கம்.

கூட்டுறவுத் துறை சார்பில் 70 கூட்டுவவு மருந்தகங்கள் விற்பனை துவக்கம். மருந்துகளுக்கு 20 சதவிகிதம் தள்ளுபடியில் விற்பனை.

தமிழ்த்தாய் வாழ்த்து! மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய தமிழ்த்தாய் வாழ்த்து அரசின் மாநிலப் பாடலாக அறிவிப்பு. பாடலைப் பாடும் போது எழுந்து நிற்க வேண்டுகோள்–அரசாணை வெளியீடு

சென்னை நந்தனத்தில் இனமானப் பேராசிரியர் சிலை திறப்பு – அவரது நூல்கள் நாட்டுடைமை

அரசின் திட்டங்கள் மற்றும் அனைத்துத் துறைகளின் செயல்பாடுகளை கண்காணித்திடும் வகையில் முதலமைச்சர் தகவல் பலகைத் திட்டம் துவக்கம்.

முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் குடும்ப ஆண்டு வருமான வரம்பின் உச்சவரம்பினை ரூ.72 ஆயிரத்திலிருந்து ரூபாய் 1.20 இலட்சமாக உயர்வு.

இயற்கையைக் கெடுக்கும் பிளாஸ்டிக் பைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் மஞ்சள் பை அறிமுகம்

சென்னை மெரினா கடற்கரையில் மாற்றுத் திறனாளிகளும் கடலலையைக் கண்டுகளிக்கும் வகையில் தற்காலிகப் பாதை அமைப்பு.

13.5 லட்சம் பேருக்கு கூட்டுறவு வங்கிகளில் வைக்கப்பட்ட 5 சவரன் நகை வரை கடன் தள்ளுபடி.

2022

முதல்வரின் முன்னெடுப்பால்.மருத்துவப் படிப்புகளில் ஒ.பி.சி. பிரிவினருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு உச்சநீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு.

மதுரையில் ரூ.114 கோடியில் கலைஞர் நினைவு நூலகம் அடிக்கல் நாட்டு விழா.

தமிழகத்தில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகள், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு புதிய கட்டிடங்கள் முதல்வர் முன்னிலையில் பிரதமர் திறந்து வைத்தார்.

முல்லைப் பெரியாறு அணை கட்டிய பென்னி குயிக் சிலை இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் நகரில் நிறுவப்படும் என முதல்வர் அறிவிப்பு.

ரூ.114.48 கோடி மதிப்பீட்டில் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அடிக்கல் நாட்டு விழா

ஈரோடு நகரில் கால்நடை தீவனத் தொழிற்சாலை, தாது உப்பு கலவை தொழிற் சாலை திறப்பு

பழனி தண்டாயுதபாணி கோயிலில் ரூ.23.81 கோடி மதிப்பில் திட்டப்பணிகள்.

கீழடி அகழாய்வு அனைத்துக்கும் முன்னோடியாகத் திகழ்கிறது. தமிழகத்தில் 7 இடங்களில் தொல்லியல் அகழாய்வுகள் – முதல்வர் அறிவிப்பு.

சேலம் – தருமபுரி இடையே 250 கோடியில் மேம்பாலம், தருமபுரியில் சிப்காட் தொழிற்பூங்கா. ரூ.4600 கோடியில் 2.0 ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் முதல்வர் அறிவிப்பு.

தமிழின் சிறப்பை உலகம் முழுவதும் கொண்டு செல்ல நடவடிக்கை. தென்கிழக்கு ஆசியாவில் 5 நாட்டு பல்கலைக் கழகங்களில் செம்மொழி தமிழ் இருக்கை.

மேடவாக்கம் – சோழிங்கநல்லூர் இணைப்புச் சாலை தமிழ் செம்மொழி சாலையாக அறிவிப்பு, கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி விருது வழங்கி முதல்வர் வாழ்த்துதுரை. உக்ரைனில் போர்ச் சூழலால் அங்கு படிக்கும் தமிழக மாணவர்கள் அனைவரும் அரசு சார்பில் அழைத்து வரப்பட்டார்கள்.

பள்ளி, கல்லூரி மாணவ - மாணவியர் இளைஞர்களின் திறன் மேம்பாட்டிற்கான "நான் முதல்வன்" - புதிய திட்டம் முதல்வர் தொடங்கி வைத்தார்.

தூத்துக்குடி ஸ்பிக் தொழிற்சாலை வளாகத்தில் இந்தியாவின் முதல் மிகப் பெரிய மிதக்கும் சூரிய மின் சக்தி – நிலையம் முதல்வர் திறந்து வைத்தார்.

தூத்துக்குடியில் சர்வதேச அறைகலன் பூங்காவிற்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

ஆங்கிலத்தில் சரளமாகப் பேச எழுத, இளைஞர்களை தனித் திறன்களை மெருகேற்ற பிரிட்டிஷ் கவுன்சிலுடன் முதல்வர் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்து. திருப்பெரும்புதூர் செயின்ட் கோபைன் நிறுவன வளாகத்தில் ரூ.500 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள மிதவை கண்ணாடி ஒருங்கிணைந்த ஜன்னல், சிப்காட் நசுர்ப்புற வனம் ஆகிய பிரிவுகளை முதல்வர் தொடங்கி வைத்தார்.

முதல்வர் தலைமையில் மாவட்ட ஆட்சியர்கள், காவல் துறை அதிகாரிகள் மாநாடு தொடக்கம்.

70 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னை தரமணியில் ரூ.5 ஆயிரம் கோடியில் உலகளாவிய தொழில் வளாகம் – முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

கிராமப்புற அரசு மருத்துவர்களுக்கு மருத்துவ மேற்படிப்பு படிக்க 50 சதவிகித இட ஒதுக்கீடுச் செல்லும் உச்சநீதிமன்றம் அளித்த மகத்தான தீர்ப்பு. 2900 மெகாவாட் மின்சாரம் குறைந்த விலையில் கொள்முதல்– முதல்வர் முன்னிலையில் ஒப்பந்தம், என்.எல்.சி., சோலார், எனர்ஜி கார்ப்பரேஷன் பவர் டிரேடிங் கார்ப்பரேஷன் நிறுவனங்களுடன் செய்யப்பட்டது. தமிழகத்தில் உலக அளவிலான செஸ் போட்டி நடத்தப்படும் என முதல்வர் அறிவிப்பு

தமிழகத்தில் கழக அரசின் நிதிநிலை அறிக்கை தாக்கல். அதில் பெண்களுக்கு மாதம் 1000 வழங்கும் திட்டம் தொடங்கிட முன்னெடுப்புப் பணிகள் ஆரம்பம் என்று அறிவிப்பு.

தமிழகத்தில் வேளாண் பட்ஜெட் தாக்கல்.

அனைவருக்கும் கல்வி, வேலைவாய்ப்பு கிடைக்க நடவடிக்கை, வண்டலூரில் வேலைவாய்ப்பு முகாமை தொடங்கி வைத்து முதல்வர் உரை.

மேகதாது அணை எதிர்ப்பு – தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றம்!

மாதந்தோறும் கல்லூரி மாணவிகளுக்கு ரூ.1000 வழங்கும் நிதி உதவி வழங்கும் 'புதுமை பெண்' திட்டம், 6 லட்சம் பேர் பயனடைவர், முதல்வர் அறிவிப்பு.

ரூபாய் 1000 கோடியில் காமராஜர் பெயரில் உயர் கல்வி மேம்பாட்டுத் திட்டம்.

தமிழகம் நம்பர் 1 மாநிலமாக வர அந்த வெற்றிக்கு எனது துபாய் பயணம் நிச்சயம் துணை நிற்கும் என முதல்வர் அறிவிப்பு.

துபாயில் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி தமிழ்நாடு அரங்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

துபாய் 5 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம், ரூ.2600 கோடியில் 9700 பேருக்கு வேலைவாய்ப்பு. இணைந்து பயணிப்போம், இணைந்து வளர்ச்சி பெறுவோம் என ஐக்கிய அரபு நாடுகளின் முதலீட்டாளர்களுக்கு முதல்வர் அழைப்பு.

தெற்காசியாவின் சிறந்த மாநிலமாக தமிழகம் உருவாக்கப்படும், அபுதாபி தமிழ்ச் சங்கம் நடத்திய பாராட்டு விழாவில் முதல்வர் உரை! அபுதாபியில் ரூ.3500 கோடி மதிப்பில் லுலு நிறுவனத்துடன் ஒப்பந்தம்.

துபாயில் இருந்து சென்னை திரும்பிய முதல்வர் பேட்டி – துபாயில் ரூ.6100 கோடி ஒப்பந்தங்கள், 14,700 பேருக்கு வேலைவாய்ப்பு. துபாய் அபுதாபி பயணம் மகத்தான வெற்றிப் பயணம்.

ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை நோக்கிய மற்றொரு மைல்கல், 8.23 லட்சம் சதுர அடியில் சென்னையில் அமேசான் நிறுவனத்தின் மிகப் பெரிய அலுவலகம் – முதல்வர் திறந்து வைத்தார்.

தி.எஸ்.டி. நிலுவைத் தொகையை உடனடியாக விடுவித்திடுக, மேகதாது அணைக்கு ஒப்புதல் தரக் கூடாது, 'நீட்' தேர்வில் இருந்து தமிழகத்துக்கு விலக்கு, தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்காக டெல்லியில், பிரதமர் மோடியை நேரில் சந்தித்து முதல்வர் வலியுறுத்தல்.

தமிழகத்திற்குச் சேரவேண்டிய நிலுவைத் தொகை ரூபாய் இருபதாயிரம் கோடியை உடனடியாக வழங்கிட ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமனைச் சந்தித்து நேரில் வலியுறுத்தல்.

புதுடெல்லியில் "அண்ணா–கலைஞர் அறிவாலயம்" முதல்வர் முன்னிலையில் திருமதி.சோனியா காந்தி திறந்து வைத்தார்.

விழுப்புரம் கொழுவாரி ஊராட்சியில் சமத்துவபுரம் – முதல்வர் திறந்து வைத்தார்.

விழுப்புரம் பெலாக்குப்பம் சிப்காட் வளாகத்தில் 6000 பேருக்கு வேலை வாய்ப்பு, ரூ.500 கோடி மதிப்பில் காலணி தயாரிக்கும் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டினார் முதல்வர்.

கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய, 4,805 கோடி ரூபாய் அளவில் 97 சதவிகித நகைக் கடன் தள்ளுபடி.

தொழில் துறையில் அரசின் சாதனை – அடுத்த ஆண்டு இறுதியில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு – பேரவையில் முதல்வர் தகவல்.

வன்னியர்களுக்கான 10.5 சதவிகித சிறப்பு இட ஒதுக்கீடு – சமூக நீதி நிச்சயம் நிலைநாட்டப்படும் – பேரவையில் முதல்வர்.

7.5 சதவிகித இடஒதுக்கீடு செல்லும் என உயர்நீதி மன்றம் தீர்ப்பு.

20 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு. ரூபாய் 1000 கோடியில் தைவான் நிறுவனத்துடன் முதல்வர் முன்னிலையில் ஒப்பந்தம்.

மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை – 7500 ரூபாய் தொகுப்புநியத்துடன்– முதல்வர் அறிவிப்பு

அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் சமத்துவ நாள். மணி மண்டபத்தில் சிலை அமைப்பு – முதல்வர் அறிவிப்பு.

அரசு மருத்துவமனைகளில் ரூ364.22 கோடியில் 1483 ஆக்ஸிஜன் படுக்கைகளுடன் ஒருங்கிணைந்த செவிலியர் கண்காணிப்பு மையம் – முதல்வர் திறந்து வைத்தார்.

சென்னையில் அமெரிக்காவின் நீல்சன் ஐக்யு நிறுவன விரிவாக்க மையம் – முதல்வர் தொடங்கி வைத்தார். உலகெங்கிலும் உள்ள நீல்சன் நிறுவனத்தின் மிகப் பெரிய மையமாக சென்னை மையம் செயல்படும் என்று தகவல்.

பத்தே மாதங்களில் 131 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், ரூ.69 ஆயிரத்து 375 கோடியே 54 இலட்சம் முதலீடு- தொழில் துறையில் தமிழ்நாடு வேகமாக முன்னேற்றம்! புள்ளிவிவரங்களுடன் பேரவையில் முதல்வர் அறிவிப்பு.

சென்னை அருகே மெகா விளையாட்டு அரங்கம், ஒலிம்பிக் தங்கம் தேடுதல், ரூபாய் 25 கோடியில் திட்டம், வ.உ.சி. சென்னையில் ரூ. 10 கோடியில் குத்துச் சண்டை விளையாட்டு வளாகம், மதுரை அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு மைதானம் அமைப்பு.

ஆண்டுதோறும் ஆறு கிராமசபைக் கூட்டங்கள் நடைபெறும்.

வழக்கறிஞர்கள் சேமநலநிதி ரூ.7 லட்சத்தில் இருந்து பத்து இலட்சமாக உயர்வு. முதல்வருக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா பாராட்டு.

பல்கலைக் கழக துணைவேந்தர்களை மாநில அரசே நியமிக்கும் சட்டமுன்வடிவு தாக்கல் நிறைவேற்றம்.

ஜீன் 3 கலைஞர் பிறந்த தினம் அரசுவிழாவாக கொண்டாடப்படும், ஓமந்தூரார் வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு திருவுருவச் சிலை அமைக்கப்படும். பேரவையில் முதல்வர் வரலாற்று நாயகனுக்கு, வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பு.

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை மக்களுக்கு 40 ஆயிரம் டன் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படும். சட்டப்பேரவையில் முதல்வர் அறிவிப்பு.

இ.சி.ஆர். சாலைக்கு (முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி சாலை(எனப் பெயர் சூட்டப்படும். முதலமைச்சர் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.2406.30 கோடியில் 32 சாலை – மேம்பாலப் பணிகள் சீரமைக்கப்படும் என்று நெடுஞ்சாலைத்துறை பவள விழாவில் முதல்வர் அறிவிப்பு. நடிகர் விவேக்கின் குடும்பத்தினர் வைத்த கோரிக்கையை ஏற்று, அவர் வசித்த தெருவுக்கு 'சின்னக் கலைவாணர் விவேக் சாலை' என பெயர் சூட்டப்படும் என முதல்வர் அறிவிப்பு.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களுக்கு உதவிட நிதி யுதவி அளித்திடுவீர். முதல்வர் வேண்டுகோள். தி.மு.க. சார்பில் ரூ.1 கோடி நிதியுதவி அளித்ததுடன் கழக சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு மாத சம்பளம் வழங்கல்.

'நீட்' விலக்கு மசோதா – குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பினார் ஆளுநர். – பேரவையில் முதல்வர் தகவல்.

முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்பு திட்டம் மற்றும் ரூ. 181 கோடி செலவில் பள்ளிகளுக்கு புதிய கட்டிடங்கள், அடிப்படை வசதிகள் – முதல்வர் தொடங்கி வைத்தார்.

அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு தொழிற்கல்விகளில் 7.5. சதவிகித இடஒதுக்கீடு படிப்பு செலவு முழுமையும் அரசே ஏற்கும் என்ற அறிவிப்பு.

நான் முதல்வன் திட்டத்தின் மாபெரும் திறன் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இணையை தளமும் தொடக்கம்

பொதுமக்களுக்கு அரசுப் பணிகள் விரைவாகவும் எளிதாகவும் சென்றடையும் வகையில் மக்களுடன் முதல்வர் திட்டம் தொடக்கம்.

மதுரை நெல்பேட்டையில் உள்ள ஆதி மூலம் மாநகராட்சி பள்ளியில் சிறார்களுக்கு காலை உணவுத் திட்டத்தை முதல்வர் தொடங்கி வைத்தார்.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. மாணவர்களை நல்வழிப்படுத்தும் 'சிற்பி' திட்டம் தொடக்கம். குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து வழங்கும் திட்டம். உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம்! தமிழ்நாடு அரசுப் பணிகளில் சேர தமிழில் தேர்ச்சி கட்டாயம். மசோதா தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றம். ஒடிசாவில் தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஒடிசா மாநில விளையாட்டுத் துறை அமைச்சக அதிகாரிகளுடன் உலகத்தரம்